123—

பாமக்குடியில் தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கிக் கிளை.

*545 டாக்டர் ச. சுந்தாராஜ்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கியின் இராம நாதபுரம் மாவட்டக் கிளை அலுவலகம் பரமக்குடியில் நிறுவுவதற்கு அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 9.55

டாக்டர் ச. சுந்தாராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தேவைகளை உணர்ந்து நிர்வாக திறமையுடன் உடனுக்குடன் பணியாற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சாதாரண மனிதனும் அரசை எளிதில் அடைய ஒரு அணுகுமுறையைக் கையாண்டு நடத்திக்கொண்டு வருகிற காரணத்தால் அரசு மறுபரிசீலனைச் செய்து மாவட்டத்தின் மத்தியில் அமைந்துள்ள பரமக்குடியில் குறிப்பாக கமுகி, முதுகுளத்தூர், கடலாடி போன்றப் பகுதிகளிலிருந்து வருவதற்கும், திருவாடனை, இராம நாதபுரம் போன்ற பகுதிகளுக்கும் மத்தியில் அமைந்துள்ள பரமக்குடிக்கு வருவதற்கும் ஏதுவாக இருப்பதால் அந்த வங்கிய அமைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1991 அக்டோபர் 1]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் வைக்கலாம் என்ற ஒரு சூழ்நிலையை எண்ணிப்பார்த்தபோது நிலவள வங்கியினுடைய எல்லைக்குள் இருக்கிற கமுதி, முதுகுளத்தூர், இராமநாதபுரம்—இங்குள்ளவர்கள் எல்லாம் இராமநாதபுரத்திற்குச் செல்வதற்கு தான் வழிவகை நன்கு இருக்கிறது. ஆகவே, அந்த நிலவள வங்கி இராமநாதபுரத்தில் இருக்கலாம் என்ற கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு கிட்டத்தட்ட 7 வருடங்கள் ஆகியும் இன்னும் மாவட்டத்தினுடைய பல்வேறு கூட்டுறவுத் துறை அலுவலகங்கள் குறிப்பாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி போன்ற அலுவலகங்கள் மாவட்டத்திற்கே வரவில்லை. இராமநாதபுரம் 2 கோட்டமாக உள்ளது. ஒரு கோட்டமாக இயங்குகின்ற இந்த பரமக்குடியில் துணைப் பதிவாளர் அலுவலகமே இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அவ்வாறு இருக்கின்ற அந்த கூட்டுறவு நிர்வாகம் மாவட்டத்திற்குள் வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மூன்றாக பிரிக்கப்பட்டு இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தின் வங்கி மதுரையில் இருப்பதை அனைவரும் அறிவீர்கள். ஆனால் இப்போது ரிசர்வ் வங்கிக்கு தெரிவித்து 3 மாவட்டங்களுக்கும் 3 மத்திய கூட்டுறவு வங்கிகள் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதற்காக ரிசர்வ் வங்கியினுடைய அனுமதியைக் கோரிப் பெற முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். அது வந்த உடன் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பசும்பொன் மாவட்டத்திற்கு காமராஜர் மாவட்டத்திற்கு என்று 3 கூட்டுறவு வங்கிகள் உருவாக்கப்படும்

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இராமநாத புரத்திற்கு ஒரு வங்கி இருப்பதன் காரணமாக மேலும் 2 வங்கிகள் புதிதாக உருவாக்கப்படும். அதோடு பல கிராமங்களில் கிளைகள் இல்லை. அப்படிப்பட்ட கிளைகளை உருவாக்குவதற்கான ஏற் பாடுகளை தற்போது அரசு செய்து கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 124, திரு. வி. எம். சுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்.

* 1472. திரு. வ. மு. சுப்பிரமணியன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தணக்கன்குளம் கிராமத்திலும், மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் இராம நாதபுரத்திலும் தொழிலாளர்களுக்காக வாங்கப்பட்ட வீட்டு மனைகளில் வீடு கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்கண்ட பொருட்கள் குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்து பல நாட்களாக கிடப்பில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலாவது அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.